புதுச்சேரி அரசு
கலை, பண்பாட்டுத்துறை

# கம்பன் புகழ் இலக்கியப் பரிசு

புகைப்படம்

வேண்டுகோள் படிவம்

விண்ணப்பம் வந்து சேரவேண்டிய கடைசி நாள் 25.11.2024

1. முழுப் பெயரும் முகவரியும் :

2. தொழில் / பணி :

3. புனைப்பெயர் :

4. நிலையான குடியிருப்பு முகவரி (குடியிருப்புச் சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்) :

5. பிறந்த தேதி (பிறப்புச் சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்) :

6. பரிசுக்கான வெளியீட்டின் முழு விளக்கம் :

   (அ) தலைப்பு :

   (ஆ) பதிப்பித்த நாள் 01.01.2023 முதல் 31.12.2023 வரை :

   (இ) வெளியிட்ட நாள் :

   (ஈ) பக்க எண்ணிக்கை :

7. மேற்படி வெளியீடு எந்த வகையைச் சார்ந்தது? (புதினம், சிறுகதை, நாடகம், கவிதை, கட்டுரை) :

8. பின்வருவன இணைக்கப்பட்டுள்ளனவா? :

   (அ) வெளியீட்டின் ஆறு படிகள்

   (ஆ) ஆசிரியரின் வாழ்க்கைக் குறிப்பு :

   (இ) ஆசிரியரின் பிற வெளியீடுகள் :

9. மேற்படி நூல் பிற அரசு, அரசு சார்பு அமைப்புகள் மற்றும் தன்னார்வ இலக்கிய அமைப்புகளின் பரிசுக்கு அனுப்பப்பட்டிருந்தால் அதன் விவரம் :

10. கைப்பேசி எண் :

## உறுதிமொழி

அடியிற் கையொப்பமிட்டுள்ள நான், பிறப்பால் மற்றும் குடியிருப்பால் புதுச்சேரி மாநிலத்தைச் சேர்ந்தவன் என்றும் மேலே கூறப்பட்ட விளக்கங்கள் அனைத்தும் முற்றிலும் உண்மை என்றும் உறுதியளிக்கிறேன். மேலும் மேற்படி நான் எந்த ஓர் அரசு சார்பு மற்றும் தன்னார்வ இலக்கிய அமைப்புகளின் பரிசினைப் பெற்றிருக்கவில்லை என்றும் உறுதி கூறுகிறேன்.

இடம்:

நாள்: **கையொப்பம்**

---

குறிப்பு: பூர்த்தி செய்யப்பட்ட இவ்விண்ணப்பம் இயக்குநர் கலை, பண்பாட்டுத்துறை, எண்.1, ரோமன் ரோலண்ட் வீதி, புதுச்சேரி 605 001 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும்

## புதுச்சேரி அரசு
## கலை பண்பாட்டுத்துறை
## *x*x*x*

# புதுச்சேரி நடுவண் ஆட்சிப் பரப்பில் தமிழ்ப்புதினம், சிறுகதை, நாடகம், கவிதை, கட்டுரை (உரைநடை) ஆகிய படைப்பிலக்கியங்களுக்கான கம்பன் புகழ் இலக்கியப் பரிசுத் திட்டம்.

**விதிமுறைகள்:-**

1. **தலைப்பு:-**

இத்திட்டம் "புதுச்சேரி நடுவண் ஆட்சிப்பரப்பில் தமிழ்ப் புதினம், சிறுகதை, நாடகம், கவிதை மற்றும் கட்டுரை (உரைநடை) ஆகிய படைப்பிலக்கியங்களுக்கான கம்பன் புகழ் இலக்கியப் பரிசுத் திட்டம்" எனப்படும்.

2. **பங்குபெறுவோர் தகுதி:**

பிறப்பாலோ, ஐந்து வருட தொடர் குடியிருப்பாலோ புதுச்சேரி அரசின் ஆட்சிப் பரப்பைச் சேர்ந்த அனைத்து எழுத்தாளர்களும் அகவை வேறுபாடின்றி இத்திட்டத்தில் பங்கு பெறலாம்.

**குறிப்பு:**

புதுச்சேரி அரசின் ஆட்சிப்பரப்பில் பிறந்தவர் அல்லது விண்ணப்பம் அனுப்புகின்ற நாளுக்கு முன்நாள் முடியத் தொடர்ச்சியாக 5 ஆண்டுகள் குடியிருப்போர் இத்திட்டத்தில் புதுச்சேரியைச் சேர்ந்தவராகக் கருதப்பெறுவர்.

3. **பரிசுத் திட்டக் கட்டுப்பாடுகள்:**

அ). ஒவ்வோர் ஆண்டும் சனவரி முதல் நாள் தொடங்கித் டிசம்பர் 31 வரை வெளியிடப்பட்ட வெளியீடுகள் பரிசுத் திட்டத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படும்.

ஆ). வெளியீடுகள் புதினம், சிறுகதை, நாடகம், கவிதை மற்றும் கட்டுரை (உரைநடை) என்னும் வகைகளில் அமையும் மூலப்படைப்பிலக்கியங்களாக இருத்தல் வேண்டும். கவிதைப் படைப்புகள் மரபுக் கவிதையாகவோ, புதுக்கவிதையாகவோ இருக்கலாம்.

இ). பிறமொழிகளின் தமிழாக்கம், மறு ஆக்கம் அல்லது சுருக்கம் ஆகியன இத்திட்டத்திற்கு ஏற்கக் கூடியன அல்ல.

ஈ). இத்திட்டத்தில், நூலில் அச்சாகியுள்ள முதல் பதிப்பின் ஆண்டே கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும், நூல் வெளியிடப்பட்ட ஆண்டு அன்று.

உ). திறனாய்வுக் கட்டுரை நூல்களும் பல்கலைக் கழகப் பட்டங்களுக்காகவோ, தேர்வுகளுக்காகவோ எழுதப்பட்ட ஆய்வேடுகளும் இத்திட்டத்திற்குத் தகுதியுடையனவல்ல.

ஊ). பரிசுக்கு அனுப்பப்படும் நூல்கள் பிற அரசு / அரசு சார்பு அமைப்புகள் மற்றும் தன்னார்வ இலக்கிய அமைப்புகள் வழங்கும் பரிசினைப் பெறாதவைகளாக இருக்க வேண்டும்.

எ). ஒவ்வொரு நூலுக்கும் 6 படிகளுடன் கூடிய தனித்தனி வேண்டுகோள் படிவங்கள் அனுப்பப்பட வேண்டும்.

ஏ). பரிசுத் திட்டத்திற்காக அனுப்பப்பட்ட நூற்படிகள் திருப்பியனுப்பப்படமாட்டா.

ஐ). இத்திட்டத்தில் பரிசு பெற்ற நூலாசிரியர் / நூலாசிரியர்கள் அடுத்த நான்கு ஆண்டுக்கு இப்பரிசு திட்டத்திற்கு விண்ணப்பிக்க இயலாது.

**4. பரிசுத் தொகை:-**

புதினம், சிறுகதை, நாடகம், கவிதை மற்றும் கட்டுரை (உரைநடை) ஆகிய ஐந்து வகைகளில் ஒவ்வொன்றிற்கும் ரூபாய். 10,000/- பரிசுத் தொகையும் சான்றிதழும் வழங்கப்படும்.

**5. விண்ணப்பிக்கும் முறை:-**

இத்திட்டத்திற்காக, இணைப்பில் குறிப்பிட்டுள்ள படிவத்தில் விண்ணப்பிக்க வேண்டும்.

**6. பரிசுத் திட்ட முடிவு:-**

அ. பரிசுக்குரிய நூல்களை ஐவர் கொண்ட வல்லுநர் குழு ஆராய்ந்து தேர்வு செய்யும்.

ஆ. வல்லுநர் குழு உறுப்பினர்கள் நூல்களை மதிப்பீடு செய்து பரிசு பெறும் நூல்களைத் தேர்ந்தெடுப்பார்கள்.

இ. வல்லுநர் குழுவின் ஒவ்வோர் உறுப்பினரும் தாம் மதிப்பிடும் உரைநடை நூல்களுக்கு ஒரு பக்கத்துக்கு 25 காசும், கவிதை நூல்களுக்கு ஒரு பக்கத்துக்கு 50 காசும் மதிப்பூதியமாக அளிக்கப் பெறுவார்கள். மொத்தத் தொகை அடுத்த பத்து ரூபாயாக வரும்படி முழுமை செய்யப்படும்.

***********